www.tamilarangam.net

முரசு 3

# தமிழ் முரசு

ஒலி 1

TAMOUL MOURASSOU

1984

தமிழ் ஈழம் தவிர்க்க முடியாதது

# ஏகாதிபத்தியத்தின் நீசத்தனம்



இந்தி(ரா)யாவின் இரத்தச்சிதறல்

இந்த நிமிடத்தில் நான் இருந்தாலும்
எனது ஒவ்வொரு துளி இரத்தமும்
இந்த தேசத்துக்கே பயன்படட்டும்" இந்திரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு - 37

## ஐக்கியப்படுவோம்! போராடுவோம்! வெற்றி பெறுவோம்!

ஏகாதிபத்தியம் மீண்டுமொருமுறை தனது சதிக்கரங்களை குருதியில் நனைத்திருக்கிறது. இம்முறை இந்தியாவின் ஒப்பற்ற தலைவியும் ஏகாதிபத்தியத்தின் சக்தி வாய்ந்த எதிரியுமாகிய பாரதப் பிரதமர் இந்திராவை உடலைக் குண்டுகளால் துளைத்து ஏகாதிபத்தியம் தனது கொலைச் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளது.

உலகின் ஒவ்வொரு மூலையிலும் முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தை நெருக்கடிகள், கிளர்ந்தெழுந்துள்ள ஒடுக்கப்பட்ட மக்களதும், பாட்டாளி வர்க்கத்தினதும் போராட்டங்கள் இவற்றைச் சமாளிக்க, தனது ஆதிக்கத்தை தொடர்ந்து நிலைநிறுத்த ஏகாதிபத்தியம் இன்று உலகின் ஒவ்வொரு மூலையிலும் தனது சதிகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இவற்றின் பிரதிபலிப்புகள்தான் நேற்றைய கிரெனடாவின் ஆக்கிரமிப்பு... இன்றோ நாளையோ ஆக்கிரமிக்கப் போவதாக நிக்கராகுவா மீதான மிரட்டல்கள்.... அப்பாவி மக்களைக் கொன்றொழிக்கும் வகையில் எல்சல்வடோரில் 'நேபாம்' குண்டு வீச்சு... சியோனிஸ்டுகளின் துணையுடன் இலெபனானில் ஆக்கிரமிப்பு... உபகண்டத்தின் அமைதியைக் கெடுக்க பாக்கிஸ்தான் அணுகுண்டு செய்ய உதவி... கறுப்பு இனமக்களை கொன்றழிக்கும் நிறவெறி தென்னாபிரிக்க அரசுக்கு பக்கபலம்... சோவியத் யூனியனுக்கெதிரான தொடர்ச்சியான யுத்த மிரட்டல்கள்... உலகப் போர் ஒன்றை ஏற்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தகைய சதிகள் நிறைந்த ஒரு காலகட்டத்திலேயே ஈழப்போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்தச் சமயத்தில் ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கங்களும், போராளிகளும் எமது போராட்டம் தொடர்ந்திருக்கும் சிக்கலான பரிமாணங்களை புரிந்து கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். எமது எதிரியின் பலத்தையும் ஏகாதிபத்தியத்தின் சர்வ வல்லமையினையும் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாகிறோம்.

விடுதலைப் போராட்டங்களை அழித்தொழிக்கும் சதிகளில் தேர்ச்சியும், சகல வசதிகளையும், சர்வ வல்லமையையும் பெற்ற ஏகாதிபத்தியத்தை தனித்த ஒரு இயக்கத்தினாலோ அன்றி தனித்த ஒரு இனமக்களாலோ தோற்கடித்துவிட முடியாது. இதற்கு ஒடுக்கப்படும் மக்கள் ஒன்று திரள வேண்டும். ஏகாதிபத்தியத்தின் எதிர்ச்சக்திகள் ஒரு கொடியின்கீழ் வர வேண்டும்.

இதற்கு முன்னோடியாக ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகிய ஆக்கிரமிப்பாளன் ஜெயவர்த்தனாவின் ஆட்சிப் பொறியமைப்பு ஈழப் போராட்டத்தின் வெற்றி மூலம் தகர்க்கப்பட வேண்டும். ஆனால் ஈழப் போராட்டத்தின் வெற்றியானது ஈழவிடுதலை இயக்கங்களின் ஐக்கியப்பட்ட போரின் மூலமே சாத்தியமாகும். மாறாக எதிரியை இனங்காணுவதில் தடுமாற்றமும்... சக இயக்கங்களை எதிரிகளாகப் பிரகடனம் செய்யும் இயக்கங்களின் செயல்கள் விடுதலையைப் பின்னுக்குத் தள்ளி ஏகாதிபத்தியத்தின் சதிகளுக்கு வழி சமைப்பதாகவே அமையும். எனவே ஏகாதிபத்தியத்தின் நவீன சதிகளையும், ஈழப் போராட்டத்தின் சிக்கலான பரிமாணங்களையும் உணர்ந்து ஒன்றிணைவோம்; போராடுவோம்; வெற்றி பெறுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திரா ஒரு சகாப்தம்



இந்திராகாந்தி — அரசியல் புத்தகத்தில் வெறுமனே புரட்டிவிட்டுப் போகும் ஒரு சாதாரண பக்கம் அல்ல. அவர் ஒரு வரலாறு. ஒரு சகாப்தம். அபூர்வமாக உதித்த ஓர் அற்புதத் தலைவி.

இந்திராவின் திறமைகளும், தலைமைகளும் வெறுமனே இந்தியாவின் எல்லைகளுக்குள் கட்டுப்படவில்லை. உலகநாடுகள் எங்கும் பரந்து விஸ்தரித்தது. இந்திராவின் அநுபவமும், சாணக்கியமும் இந்த நூற்றாண்டில் மூன்றாவது உலகநாடுகளுக்கு தலைமை தாங்கும் தகுதியை அளித்தது.

இந்திரா பதவியிலிருந்த ஒரு இடைக் காலம் தவிர்ந்த கடந்த 18 வருடங்கள் பாரத வரலாற்றின் சிறப்புமிகு அத்தியாயங்கள். காலனித்துவ வயிற்றைக் கிழித்துவந்த சுதந்திரக் குழந்தையான இந்தியாவை வெட்டிச் சாய்க்க நாலாபுறமும் ஏகாதிபத்தியச் சக்திகள் முட்டி மோதிக் கொண்டிருந்த வேளையிலே... அருமைத் தனத்திலும், பிற்போக்குச் சிந்தனைகளிலும், சுரண்டலிலும்,

www.tamilarangam.net



அதிகாரப் போட்டிகளிலும், மத-இனப் பிளவுகளிலும் தேசம் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையிலே... வறுமையும், பஞ்சமும், வேலையில்லாமையும் இந்தியாவை இருளாய் சூழ்ந்திருந்த வேளையிலே, இந்தியப் பெண்கள் அடிமைகளாய் அடக்கி ஒடுக்கப்பட்ட வேளையிலே 1966ல் இந்திராவின் தலைமையிலே இந்தியப் பிரதமர் பதவி சுமத்தப்பட்டது.

பதவிக்கு வந்த சில காலத்திலேயே இந்தியாவைச் சோசலிச மயமாக்கும் இந்திராவின் கொள்கைத் திட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. முதலாளித்துவ முதலைகளின் தலைகளைத் தகர்த்து தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இருளில் கிடந்த இந்தியா ஒளியைத் தரிசிக்கத் தொடங்கியது. கைத்தொழில் புரட்சி ஆரம்பமானது... விஞ்ஞான வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது... உணவு உற்பத்தி ஊக்கப்படுத்தப்பட்டது...

விளைவு - எங்கோ முடங்கிக் கிடந்த இந்தியா கைத்தொழில் உற்பத்தியில் உலகில் ஒன்பதாம் இடத்தைப் பற்றியது. விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகள் அதிசயத்தை ஏற்படுத்தின. உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணப்பட்டது. முழு-இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன... ஏற்றுமதி அதிகரித்தது... உலகச் சந்தையில் இந்தியப் பொருட்களும் இந்தியத் தொழில் நுட்பமும் போட்டி போட்டு வாடிக்கையான முதலாளித்துவச் சுரண்டல்க் காரரை அடித்து விரட்டியது. இந்தியாவின் விஞ்ஞானம் அணுகுண்டு, விண்கலங்கள் என்று வானை எட்டியது. இவ்வளர்ச்சி கண்டு உலகே அதிசயித்தது. வறுமை, பசி, பஞ்சம் என இந்தியா மீது பூசப்பட்டிருந்த வர்ணம் கலையத் தொடங்கியது. பாரத மக்கள் இந்தியா என்றால் இந்திரா என்றனர். மூன்றாவது உலக நாடுகளோ எமக்கு கிடைத்த ஒப்பற்ற தலைவி என்றனர். இந்தச் சாதனைகளை சமவுடைமைச் சக்திகளின் துணையுடன் இந்தியா நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net



உலகச் சந்தையிலே முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களுக்குக் கிடைத்த அடி, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது சுரண்டல் அத்தியாயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதால் ஏற்பட்ட தாக்கம், அமெரிக்க மாயை அம்பலப்படுத்தப்பட்டு, சிவப்புக் கொடிகள் பாரதக்கொடியுடன் இணைந்து பறக்க ஆரம்பித்ததால் கிடைத்த பேரடி, இந்திய-சோவியத் ஒப்பந்தம் பாரதத்தில் ஏற்படுத்திய சீரான வளர்ச்சி, மூன்றாவது உலகநாடுகள் இந்தியாவின் பின்னால் அணிதிரளத் தொடங்கியமை - இவை எல்லாமே ஏகாதிபத்தியத்துக்குத் தாங்கமுடியாத வலியைத்தான் ஏற்படுத்தின.

இந்தவலி இந்தியாவுக்கெதிரான சதியின் அடிப்பின்னலாகப் பின்ன வைத்தது. ஏகாதிபத்தியத்தின் சதிகள் - இந்தியாவில் இன, மத பிளவுகளைத் தூண்டின - இந்தியாவுக்கெதிராக அண்டைநாடுகளை போரில் ஈடுபட வைத்தன. மீண்டும் மீண்டும் இந்தியாவுக்கு அச்சுறுத்தின - இந்திராவை அதிகார வெறியர் என உலகம் முழுதும் பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டன. ஆனால் அத்தனையையும் இந்திரா(மா) சமாளித்தாள்(ர்)

இந்திராவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு மூன்றாவது உலகநாடுகளுக்கு உற்சாகமளித்தது. சுரண்டலை எதிர்த்துப் போராட வைத்தது. சமவுடமை அணிகளுடன் இணைய வைத்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் கட்டி வைத்திருந்த சுரண்டல் மாளிகை பொறிந்து கொட்ட ஆரம்பித்தது. ஏகாதிபத்தியத்தைப் பார்த்து வினவழுத்துக் கொண்டெழுந்த முதலாளித்துவத் தலைமைகள் தாக்கியழிக்கப்பட்டன.

www.tamilarangam.net


இத்துடன் இந்திரா ஓயவில்லை. தேச விடுதலை இயக்கங்களுக்கான தனது ஆதரவை பகிரங்கமாகவே அளித்தார். ஆதிக்கச் செருக்குடையவர்களையும், அடக்குமுறையாளர்களையும் பகிரங்கமாகவே சாடினார். பாலஸ்தீன மக்களின் போராட்டம், ஆபிரிக்க மக்களின் போராட்டம் ஆகியவற்றிற்கு பக்கதுணை ஆனார். அந்த முறையில் சிந்தித் தவித்த பங்களாதேஷ் மக்களுக்கு இந்திரா சுதந்திரத்தை மீட்டுக் கொடுத்த சம்பவம் மறக்கக் கூடியதா?

ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் இந்திரா வகித்த பங்கு மகத்தானது. சிறீலங்காவின் சோவனிச அரசாங்கம் ஈழமக்களைக் கொன்றொழிக்கும் கொடுஞ்செயலை உலக அரங்கில் பகிரங்கப்படுத்தி, சிறீலங்கா சோவனிச அரசை அம்பலப்படுத்தியதுடன் அன்னை இந்திரா ஓயவில்லை. ஈழப் போராட்டத்திற்கு தனது தார்மீக ஆதரவை பூரணமாகவே அளித்தார். இந்திராவின் தலையீடு இல்லாவிட்டால் சிறீலங்காவின் சோவனிச அரசு தங்கு தடையின்றி ஈழமக்களைக் கொன்றழித்திருக்கும். நாய்களாய் அலைந்த சிறீலங்காத் தலைவர்களின் தந்திர முட்டல்களை அம்பலம் செய்து ஈழமக்களின் எதிர்காலத்திற்கு இனியேற்ற மிகச் சமயோசிதமாகவே நடந்து வந்த இந்திரா ஈழமக்களின் நம்பிக்கை நட்சத்திரம்.

இன்று அந்த நம்பிக்கை நட்சத்திரம் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டது. பல கோடி பாரத மக்களின் கனவுகள் சிதைக்கப்பட்டு விட்டன. இதற்கான சூத்திர சதிவலையையும் சி.ஐ.ஏ யே பின்னியது என்பதில் முற்போக்குச் சக்திகள் எவரும் மாறுபடவில்லை.

www.tamilarangam.net


ஏகாதிபத்தியச் சதியாளர்களின் கைகளாகவே மது வெறியாளர்கள் உபயோகிக்கப்படுகின்றார்கள். இதனை "இந்தியாவின் தன்னிகரற்ற தலைவியைக் கொலை செய்த குற்றவாளிகளையும் அவர்களது எஜமானர்களையும் கண்டுபிடிக்கிறோம்" என்ற சோவியத் தலைவரின் உரை மேலும் உறுதிப்படுத்துகிறது. இந்தச் சதியாளர்களின் சதிகள் விரைவில் அம்பலப் படுத்தப்படும்.

எது எப்படியிருந்த போதும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்திரா உருவாக்கிய பேரணியை வலுப்படுத்துவதொன்றே தான் ஈழ மக்களாகிய நாம் அன்னை இந்திராவுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். எனவே இன்று உலகைச் சுற்றி வளைத்து நிற்கும் ஏகாதிபத்தியச் சதிகளைத் தகர்த்தெறிவோம் என இந்திரா சிந்திய செங்குருதித் துளிகளின் மீது ஆணையிட்டு உறுதியெடுத்துக் கொள்வோம்.

## நாட்கள் வருமோ வெளுக்க

காலைப் பொழுதின் தான் வழியே
காணத் தெரியும் செங்குருதி
உச்சிப் பொழுதின் வேளையிலே
வெடிச் சத்தம் தான் கேட்கும்
சாலையோரம் சவக்குழிகள் சந்தி நீளம்
பிணக்குவியல்கள்
மாலை நேரம் மண்வெட்டித் தூக்கும்
பல பிணங்கள்
சோலை நிறம் செந்நிறம் காலம் காட்டும்
புரட்சியினை
கோலம் கொண்டோம் போருக்கு
கோட்டை தகரும் வெளுக்க
ஈழ இசையை நாம் கேட்கும்
நாட்கள் வருமோ வெளுக்க

www.tamilarangam.net



# ஈழம் தமிழகம் ஸ்ரீலங்கா செய்திகள்

## ஐ.நா. சபையில் ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாகப் பிரேரணை நிறைவேறியது.

அண்மையில் ஜெனிவாவில் நடந்து முடிந்த ஐ.நா சபையின் மனித உரிமைகள் பற்றிய உப குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா அரச பிரதிநிதிகளின் ஆட்சேபனைகளையும் மீறி இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் திரும்பத் திரும்ப நிகழும் வன்செயல்களின் விளைவாக ஏற்பட்டுள்ள பாரிய இழப்புகள் பற்றி கவலை தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறிய இத்தீர்மானத்துக்கு ஆதரவாக சோவியத் யூனியன், இந்தியா உட்பட பல நாடுகள் வாக்களித்தன. சீன, ருமேனியா உட்பட சிலநாடுகளோ தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகளை அம்பலப்படுத்தும் இத் தீர்மானம் நிறைவேறுவதற்காக இந்தியா மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## 'அப்பாவித் தமிழ் மக்கள் வேண்டுமென்றே கொலை' சர்வதேச மன்னிப்புச் சபையும் கவலை.

'இலங்கையில் பாதுகாப்பற்ற தமிழ் சிறுபான்மை இனத்தவர்கள் வேண்டுமென்றே கொல்லப்படுவதாக' சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. 50க்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் சிறையில் கொல்லப்பட்டது குறித்து தான் கவலை கொண்டிருப்பதாகவும் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக அரங்கில் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா அரசின் சுயரூபங்கள் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

www.tamilarangam.net



## கொழும்பில் பல இடங்களில் குண்டு வெடிப்புக்கள்

கொழும்பு நகரின் பல்வேறு முக்கிய இடங்களில் வைக்கப்பட்ட ஆறுக்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் 22.10.84 அன்று காலை வெடித்து சேதத்தையும் பீதியையும் ஏற்படுத்தின. இக்குண்டு வெடிப்புக்களால் மூன்று பேர் கொல்லப்பட்டனர். எழுவர் காயத்துக்குள்ளாகினர். கொட்டாஞ்சேனைத் துறைமுகப் பொலிஸ் நிலையம், கோட்டைப் புகையிரத நிலையக் கட்டிடம், பெரிய கொடை, மருதானை டவர் மண்டபம், கறுவாக்காடு ஆகிய இடங்களில் குண்டுகள் வெடித்தன. மேற்படி துறைமுக பொலிஸ் நிலையத்துக்கு வெடிகுண்டு வைக்க முயன்ற தமிழ் இளைஞர் பலியானதாகவும் இவர் காவலூரைச் சேர்ந்தவரும் வெள்ளவத்தையில் வசிப்பவருமான பொறியியல் பட்டப் படிப்பை முடித்த பரிபூரணன் என்று சிறிலங்கா பொலிசார் செய்தி வெளியிட்டதுடன் இவ்விளைஞனின் தந்தையாரையும், சகோதரனையும் கைது செய்துள்ளனர். அதே வேளையில் ஈழத்துக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கை அரசுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## எண்ணெய்க் குழாய்க்கு வைக்கப்பட்ட வெடிகுண்டுகள்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சபுகஸ்கந்தைக்குச் செல்லும் பிரதான எண்ணெய் விநியோகக் குழாய்க்கு வைக்கப்பட்ட குண்டுகள் பெருத்த சத்தத்துடன் வெடித்த போதிலும் எந்தச் சேதத்தையும் ஏற்படுத்தவில்லை. திட்டமிட்டபடி இக்குண்டுகள் வெடித்திருந்தால் கொழும்பு நகர் முழுவதுமே பெருந் தீவிபத்துக்கு உள்ளாகியிருக்கும். இதைப் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசின் கிலேசத்தை அதிகரித்துள்ளதுடன் தமிழ் - சிங்கள இளைஞர்களிடையே கூட்டு உருவாகியுள்ளதோ என்ற கலக்கத்தையும் அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழக முதல்வரின் உடல்நிலை சீரடைகிறது.

கடும் சுகயீனம் காரணமாக சுயநினைவும் அற்றவராக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல் சீரடைய ஆரம்பித்துள்ளது. சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்ட திரு. இராமச்சந்திரனுக்கு வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இதே வேளையில் தமிழக முதல்வர் குணமடைய வேண்டும் என வேண்டி பிரார்த்தனைகளும், பூசைகளும் தமிழகம், எங்கும் நடைபெறுகின்றன. முதல்வரின் உடல்நிலை கண்டு கவலை அடைந்து பல ஆதரவாளர்கள் தீக்குளித்துள்ளனர். இவ்வகையில் இதுவரை ஏழு பேர் தமது உயிரை மாய்த்துள்ளனர். அதே சமயம் திரு. நெடுஞ்செழியனின் தலைமையில் தமிழக அமைச்சரவை தற்போது அரசு அலுவல்களைக் கவனித்து வருகிறது. திரு. எம். ஜி. இராமச்சந்திரனை திருமதி. இந்திராகாந்தியும் வைத்தியசாலையில் வந்து பார்த்திருந்தார்.

## விடுதலை இராணுவத் தோழர்கள் வீரமரணம்.

10.10.84 அன்று மயிலிட்டியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் தம்மைச் சுற்றி வளைத்த படையினரைக் காயப்படுத்தி, மரணத்தை விளைவித்ததோடு தொடர்ந்து தாக்குதல் நடத்தி தமது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்துபோகவே தம்மைத் தாமே அழித்துக் கொண்ட ஜெயப்பிரகாஷ் (கண்ணன்), ரவீந்திரன் (பாறு) ஆகிய தோழர்களுக்கு வீரவணக்கம் தெரிவித்து தமிழீழ விடுதலை இராணுவம் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட தோழர்களின் சடலங்களை பெற்ற விடுதலை இராணுவம் யாழ். வைத்தியசாலையிலிருந்து மீட்டெடுத்து இறுதிக்கிரியைகளை செய்தது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net


## அனைத்து அதிகாரங்கள், ஊழல், மிரட்டல் இவற்றைப் பிரயோகித்து இடைத்தேர்தல்களில் ஐ.தே.க. வெற்றி!

தன்னுடைய அனைத்து அரச அதிகாரங்கள், ஊழல், மிரட்டல் இவற்றைப் பிரயோகித்து மின்னேரியா, கொட்டாவை ஆகிய சிறீலங்கா தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஐ.தே.க. வெற்றி பெற்றுள்ளது. கொட்டாவையில் 18,492 பெரும்பான்மை வாக்குகளால் ஆர்.பி. விஜேசிறியும் மின்னேரியாவில் 9,176 வாக்குகளால் விஜேகோனும் வெற்றிபெற்றனர். இத்தொகுதியில் எதிர்க்கட்சிக் கூட்டங்கள் பொலிசாரினால் குழப்பப்பட்டது, எதிர்க்கட்சி வேட்பாளர்களும், வாக்காளர்களும் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டனர். ஏராளமான முறைகேடுகள் இத்தேர்தல்களின் போது அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

## ஈழ மீனவர்களின் வயிற்றில் மேலும் ஓர் அடி! வடகடலில் ஊரடங்கு!

அன்றாட வாழ்க்கை அடக்குமுறையாளர்களினால் சீர்குலைந்து தவிக்கும் ஈழ மீனவர்களின் வயிற்றில் மேலும் ஓர் பேரிடி விழுந்துள்ளது. காரை நகருக்கு மேற்குப்புறமாகவுள்ள கடற்கரைப் பகுதிகளில் இரவு நேரங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் இக்கடல் பகுதியில் யாரும் மீன்பிடிக்கக் கூடாதென உத்தரவிடப்பட்டுள்ளது. அதே வேளையில் சிறீலங்கா கடற்படையினரால் தொடர்ச்சியாக ஏராளமான இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் எதிர்த்து இந்திய தரப்பில் வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் நகரில் ஜப்பானிய பிக்கு சுடப்பட்டுக் கொலை.

யாழ்ப்பாணம் சென். மத்தியூஸ் வீதியில் வைத்து 28.10.84 அன்று மாலை ஜப்பானிய பிக்கு ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலை ஈழப் போராளிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதமாக ஆக்கிரமிப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## தொடரும் அரச பயங்கரவாதம்...

ஈழ மக்களை அடக்கியொடுக்கும் ஆக்கிரமிப்புப் படையினரின் அக்கிரமங்கள் தொடர்ந்து எல்லை மீறிக்கொண்டே செல்கின்றன. மட்டு நகர், திருமலை, மலையகப் பகுதிகளில் பெண்கள் உட்பட ஆயிரமானவர்கள் காரணம் ஏதுமின்றி கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதியில் அப்பாவி மக்கள் வீதிகளில் கோரமாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் சிறீலங்காப் படையினர் தொடர்ந்து மேற்கொண்டுவரும் பீரங்கித் தாக்குதல்கள் மக்களைப் பீதிக்குள்ளாக்கியுள்ளது. மட்டு நகர் பிரதம வைத்தியசாலையின் வைத்தியர்களும், தாதிகளும் ஈழப் போராளிகளுக்கு சிகிச்சை அளித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். 22.10.84 அன்று இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மூன்று இளைஞர்களைப் பலிவாங்கியுள்ளது. 29.10.84 அன்று தெல்லிப்பழை மாதனையில் சில இளைஞர்கள் இராணுவத் துப்பாக்கிக்கு இரையாகியுள்ளனர். உரும்பிராயிலும் சில இளைஞர்கள் கொல்லப்பட்டனர். தேடுதல் சோதனை என்றபெயரில் சிறீலங்கா அரசபடைகள் நிகழ்த்திவரும் அக்கிரமங்களும் தொடர்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மதுகுமாரைச் சந்திக்க ஈழப் போராளிகள் விரும்பவில்லை.

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை மதுகுமார் எவரையும் சந்திக்கவோ சென்னையில் பேச்சு வார்த்தை நடத்தவோ தாங்கள் விரும்பவில்லை என தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்கள் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளன. 'இவர்கள் சிறிலங்கா அரசுடன் பேசி தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விளக்கி சிறையில் அடைபட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்து, தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை மீளப்பெற இவர்கள் முயற்சிக்கட்டும். இதைவிட்டு இங்கு வந்து எம்மை சந்திக்க முயல்வது காலத்தை வீணடிப்பதாகவே இருக்கும்' என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'சமூக விரோதிகள்' பலர் தொடர்ந்து கொலை.

ஈழத்தின் பல பகுதிகளிலும் சமூக விரோதிகள் பலர் விடுதலை இயக்கங்களினால் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இயக்கத்துக்கு களங்கத்தை ஏற்படுத்திய காரை நகரைச் சேர்ந்த சந்திவேல், கனகலிங்கம் ஆகியோருக்கு தமிழீழ விடுதலை இயக்கம் மரணதண்டனை வழங்கியுள்ளது. சிறிலங்கா அரசின் ஒற்றரான ஜெயசேனாவுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் படை மரணதண்டனை வழங்கியது. சாவகச்சேரியில் 50வயதுடைய மராணம் போர்ட், வெல்லந்துறை, கருவாக்கிக்குடியில் பொற்கொல்லர் பாலசிங்கம், நெல்லியடியில் சுப்ரமணியம் ஆகியோருக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர். திருக்கோவிலில் அழகையா என்பவரும் மட்டக்களப்பில் சார்ஜண்ட் ஆரியவன்சவும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net



# சோசலிசத்தை நோக்கி....

'சோசலிசம்' இன்று பலர் மத்தியில் ஒரு 'பாஷன்' ஆகியிருக்கின்றது. ஆனால் சோசலிச ஈழத்தை இலட்சியமாகக் கொண்ட சக்திகள் இதில் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டும். சோசலிசம் பேசுவோரில் ஒரு பகுதியினர் உண்மையில் அதனை அடைய வேண்டுமென்பதில் ஆர்வங் கொண்டோராயுள்ளனர். ஆனால் இவர்களில் ஒரு சிறு தொகையினரே சோசலிச சமூகம் என்றால் என்ன என்பதுபற்றி சிறிதளவாவது அறிவுடையோராய் உள்ளனர். மிகுதியானோர் சோசலிசத்தின்மீது விருப்புடையோராயிருப்பினும் அது தொடர்பான அறிவற்றவர்களாக — அது தொடர்பான அறிவைத் தேட முற்படாதவர்களாக உள்ளனர். இவ்வாறானவர்கள் யார் சோசலிசம் பேசினாலும் நம்பிவிடுகிறார்கள். இவர்கள் சோசலிசத்தை எவ்வாறு அடைய முடியும் என்பதில் தெளிவான சிந்தனை இல்லாதபடியால் முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ சக்திகளால் ஏமாற்றப்பட்டுவிடுகிறார்கள்.

'சோசலிசம்' பேசுபவர்கள் எல்லோரும் உண்மையான சோசலிச சக்திகள்தான் என்றில்லை. வரலாற்றில் ஹிட்லர் பேசியதும் 'தேசிய சோசலிசம்' தான் என்பதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஏன்! இன்று ஈழத்து மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான கொடூரங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஜெயவர்த்தனவும் 1977ம் ஆண்டு தேர்தல் கூட்டங்களில் 'சோசலிசம்' தான் பேசினான். சிறிலங்காவின் அரசியல் சட்டம் கூட 'சிறீலங்கா சோசலிசக் குடியரசு' என்றுதான் குறிப்பிடுகிறது. பேச்சு வார்த்தை விளையாட்டுக்களின் மூலம் ஜே.ஆருடன் கபட நாடகம் ஆடும் தமிழ் இனத்தின் கோடரிக் காம்பான தரகு முதலாளித்துவ தமிழர் கூட்டணியின்

www.tamilarangam.net



கொள்கையும் 'இறைமையுடைய மதச் சார்பற்ற சுதந்திர சோஷலிசத் தமிழீழக் குடியரசு' என்றுதான் குறிப்பிடுகின்றது. மேற்கூறப்பட்டுள்ள சக்திகள் எப்படிப்பட்டவை என்பது எமது மக்களுக்கு வெள்ளிடை மலையாகும்.

ஆனால் ஈழத்து மக்களுக்கு குறிப்பாக இன்று சமூகத்தில் காணப்படும் அநீதிகளையும், அக்கிரமங்களையும் காணப் பொறுக்காது தம்மைத் தாமே தியாகத்தீயில் இறக்கியுள்ள ஈழத்து இளைஞர்களுக்கு உள்ள குழப்பம் என்னவென்றால், ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா இயக்கங்களும் இன்று 'சோசலிச ஈழம்' தான் பேசுகின்றன. இதில் யார் உண்மையான சோசலிஸ்டுகள். யார் சோசலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய விஞ்ஞான பூர்வமான பார்வையும் நடைமுறையும் உள்ளவர்கள் என்பதனை அடையாளம் கண்டுகொள்ள முடியாமையே யாகும்.

சோசலிசம் பற்றி ஓரளவு அறிவுடையவர்களிலும் இருபகுதியினர் உள்ளனர். அதில் ஒருபகுதியினர் விஞ்ஞான பூர்வமான தத்துவ நடைமுறையை நாடுகின்றவர்களாகவும் மறுபகுதியினர் கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் என அழைக்கப்பட்ட கட்சிகள் நடைமுறையற்ற வரட்டுத் தத்துவத்தை வேதவாக்காகக் கூறிக் கொண்டிருந்ததனால் இன்று அடுத்த பக்கம் அதி தீவிரவாதிகளாக தத்துவமற்ற நடைமுறையை நாடியுள்ளனர். நடைமுறை சரியா? பிழையா? என்ற கேள்வி, பதில் கலந்துரையாடலின்றி தமது நடைமுறைக்கெல்லாம் மார்க்சிச முலாம் பூசிக்கொண்டு எப்போதுமே செயல் எண்ணிக்கைகளைக் குவிக்கும் போக்கு (ACTION MOUNTED TENDENCY) உடையோராய் காணப்படுகின்றது. இது நீண்டகால சோசலிச விரோத நிலைப்பாட்டுக்கே இட்டுச் செல்லும்.

ஈழமக்களில் பெரும்பான்மையோர் சோசலிச ஈழத்தையே விரும்புகிறார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும். எமது ஈழதேசம்

சுய பொருளாதார விருத்தியை - தன்னிறைவை அடைய வேண்டுமானால், சாதி ஒடுக்கு முறை பிரதேசப் பிரிவினைகள், மதப்பிளவுகள், மனிதனை மனிதன் சுரண்டுகின்றமை, பெண் ஒடுக்குமுறை, சீதனக் கொடுமை ஒழிய வேண்டுமானால், உண்மையான மக்கள் ஜனநாயகம் நிலவ வேண்டுமானால், ஈழமானது மக்கள் தேசிய ஜனநாயகப் புரட்சி என்னும் பாதையினூடாக சோசலிச ஈழம் எனும் நிலையை அடைந்தாக வேண்டும்.

ஆனால் எமது ஈழதேசமானது தமிழர் கூட்டணி அல்லது அதுபோன்ற முதலாளித்துவ சக்திகளின் அதிகாரத்தின் கீழ் வருமாக இருந்தால் நிச்சயம் பாசிச ஈழம் எனும் நிலையையே அடையும். முதலாளித்துவ சக்திகள் தாம் அதிகாரத்தைக் கைப்பற்றி நிலைப்படுத்திக் கொள்வதற்காக மக்களைச் சாதியாலும், மதத்தாலும், பிரதேசப் பிரிவினைகளாலும் கூறுபோடுவார்கள். எமது தேசத்தை ஏகாதிபத்திய நாடுகளின் மூலதன, வர்த்தக சந்தைக் காடாக்கி எங்கும் வேலையின்மை, பணவீக்கம், வாழ்க்கைத் தரவீழ்ச்சி என்பவற்றை வழங்குவார்கள். சிறு எண்ணிக்கை கொண்ட முதலாளிகளின் ஜனநாயகம் பெரும்பான்மையான தொழிலாள, விவசாய, நடுத்தர வர்க்க மக்கள் மீது சர்வாதிகாரமாகத் தொழிற்படும். வாழ்க்கை நிலையின் வீழ்ச்சிக் கெதிராக மக்கள் போராடுவதைத் தடுக்க இராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும். முதலாளித்துவ வாதிகளின் கையில் ஈழத்தின் அதிகாரம் வந்தால் இதேயொரு நன்மைதானிருக்கும். அதாவது வருடா வருடம் தேசிய கீதம் பாடி தேசியக் கொடி ஏற்றலாம். ஐந்து வருடத்துக் கொருமுறை பாராளுமன்ற அரசியல் வாதிகளின் கொள்ளைக் கும்பல்களுக்கும், ஏமாற்று மேடைப் பேச்சுக்களுக்கும் பலியாகிப் போகலாம். அது கூட நிரந்தரமாக இருக்காது. அதனை இன்று ஜே.ஆர். ஆட்சியிலே பார்க்கிறோமே.

முதலாளித்துவவாதிகள் தற்போது மக்களை முன்னால் முதலாளித்துவம் சிறந்தது என்று பேசுவதில்லை.

www.tamilarangam.net


முதலாளித்துவத்தை விட்டுவிடுவார்கள். சோசலிசமே தமது குறிக்கோள் என்று பேசுவார்கள். ஆனால் அவர்கள் பேசுகின்ற சோஷலிசம், சுதந்திரம், சகோதரத்துவம் என்பதெல்லாம் சுரண்டும் முறையில் சோஷலிசம், சுரண்டுவதற்கு சுதந்திரம், சுரண்டுபவர்களுக்கிடையில் சகோதரத்துவம் என்பதுதான் அவர்களின் உண்மையான அர்த்தம் ஆகும். இதனை நாம் எமது கற்பனையில் கூறவில்லை. முதலாளித்துவ அரசு அதிகாரம் நிலவுகின்ற அனைத்து மூன்றாம் உலகநாடுகளிலும் வெளிப்படையாகப்பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

எனவே நாம் அடையப்போகும் எமது சுதந்திர ஈழதேசமானது 'சோசலிச ஈழம்' எனும் நிலையை அடைய வேண்டுமானால் சோசலிச ஈழத்தை விரும்பும் அனைவரும் ஈழவிடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலத்திலிருந்தே அதற்கான தெளிவான சிந்தனை, செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். சோசலிச ஈழத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள அனைவரும் கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களில் சில பின்வருமாறு...

1) புரட்சிகரக் கட்சி இல்லாமல் புரட்சி என்பது இல்லை. ஈழத்தில் சோசலிசப் புரட்சி நடைபெற வேண்டுமாயின் அதற்கான புரட்சிகரக் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டியது புரட்சிகர சக்திகளின் கடமையாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆயுதம் தாங்கிய படை ஒரு புரட்சிகரக் கட்சியின் தலைமைதாங்கப்படும் போதே அப்படையும் புரட்சிகரப் படையாகும். புரட்சிகரக் கட்சியின் தலைமையில் செயற்படாத ஆயுதப்படை நீண்டகாலப் போக்கில் பிற்போக்குத்தனமான பாசிச நடைமுறைகளுக்கே வழியமைக்கும். ஈழவிடுதலைப் போராட்டத்தில் சில ஆயுதம் தாங்கிய குழுக்கள் விடுதலைப் போராளிகளின் கருத்துச் சுதந்திரத்தை அங்கீகரிக்காது கருத்து முரண்பாட்டை துப்பாக்கி மூலம் தீர்த்துக் கொள்ளும் பாசிசப் போக்கினைக் கடைப்பிடிப்பதற்குக் காரணம் அக்குழுக்கள் புரட்சிகரக்

www.tamilarangam.net



கட்சியின் தலைமையின் கீழ் கட்டுப்பட்டு இயங்குவதாகவே ஆகும். இவ்வாயுதம் தாங்கிய குழுக்கள் தமது தத்துவமற்ற நடைமுறைகளுக்கு தத்துவமுலாம் பூசுவதற்கு சிலரை வைத்துள்ளன. அதற்கு அரசியற் பிரிவு என்றும் பெயர் கொடுத்துள்ளன. இவ்வரசியற் பிரிவு என்பது புரட்சிகரக் கட்சியாகமாட்டாது.

2) தேசிய விடுதலைப் போராட்டம், மக்கள் தேசிய ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி என்பவற்றுக்கு வழிகாட்டும் புரட்சிகரக் கட்சியானது பாட்டாளி வர்க்க சித்தாந்தமாகிய மார்க்சிச லெனினிசத்தை தமது அடிப்படைச் சித்தாந்தமாக ஏற்று அதன் அடிப்படையில் கட்டுக் கோப்பினையும், நடைமுறையையும் கொண்டிருக்கும் அமைப்பே புரட்சிகரக் கட்சியாகும். மார்க்சிச லெனினிசத்தை ஏற்றுக் கொள்ளாத, அதனடிப்படையில் செயற்படாத எந்தவொரு கட்சியும் அல்லது எந்தவொரு இயக்கமும் உண்மைச் சோசலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவரமாட்டாது. மாறாக அவை நடைமுறையில் -தம்மையறிந்தோ, அறியாமலோ - பாசிச அரசின் தோற்றத்திற்கே வழிவகுப்பனவாகும். சோசலிசச் சக்திகள் மட்டும் அல்லாது, ஜனநாயக, முற்போக்குச் சக்திகள் அனைத்தும் மார்க்சிச-லெனினிச அடிப்படையில் இயங்கும் புரட்சிகர இயக்கத்துடன் இணைந்து அதன் வழிகாட்டுதலின் கீழ் இயங்குதல் அவசியமாகும். ஏனெனில் மார்க்சிச-லெனினிச அடிப்படையில் இயங்கும் ஒரு இயக்கத்தினால் மட்டுமே உண்மையான மக்களின் ஜனநாயகம் நிலவுகின்ற, முற்போக்கு ரீதியில் சமூக வளர்ச்சியடைகின்ற நிலையை ஏற்படுத்த முடியும்.

3) இன்றைய உலகில் மார்க்சிய விரோதிகள் கூட மார்க்சிச-லெனினிச சித்தாந்தத்தைப் பேசுவது ஒரு பாஷனாகி விட்டது. மார்க்சிச-லெனினிசத்தை ஒரு இயக்கம் கடைப்பிடிப்பது உண்மையானால் அவ்வியக்கம் உட்கட்சி ஜனநாயகம், விமர்சனம், சுயவிமர்சனம் என்பவற்றைக் கொண்டதாக

www.tamilarangam.net


இருத்தல் வேண்டும். ஒரு புரட்சிகரக் கட்சியானது ஜனநாயகம் என்பதன் பேரில் அதீத ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க முடியாது. ஆகையால் கீழிருந்து மேல் நோக்கிய ஜனநாயகத்தையும், மேலிருந்து கீழ் நோக்கிய மத்தியத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட இயக்கமாக நடைமுறையில் செயற்பட்டாக வேண்டும்.

தனிமனிதனை மையமாகக் கொண்ட ஒரு இயக்கமோ அல்லது கிராமியக் கட்டுப்பாடு என்பதன் பேரால் கருத்து வேறுபாடுகளை துப்பாக்கிமுனையில் தீர்க்க முயலும் ஒரு இயக்கமோ சோசலிசத்துக்கு கூட அல்ல ஒரு முதலாளித்துவ ஜனநாயகத்துக்குக் கூட வழியமைக்க மாட்டாது. விடுதலைக்குப் பின் ஒரு இயக்கம் அது நாட்டை எப்படி அமைக்கப் போகின்றது என்பதை அவ்வியக்கம் விடுதலைப் போராட்டகாலத்தில் எப்படியிருக்கிறது என்பதிலிருந்து கண்டுகொள்ளலாம். ஒரு விடுதலை இயக்கத்தினுள் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பது அரசியல் ரீதியில் கையாளப்பட வேண்டுமேதவிர இராணுவரீதியில் கையாளப்படக் கூடாது. இயக்கத்தினுள் நிலவும் கருத்து முரண்பாட்டைத் துப்பாக்கி முனையில் தீர்க்க முற்படுவது அவ்வியக்கத்தினுள் தனிமனித சர்வாதிகாரம் நிலவுவதையே காட்டுகின்றது. இதனை இயக்கத்தினுள் நிலவும் பாசிசம் எனலாம். குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் தாமாகத் தனித்துச் செயற்படும் போது இப்பாசிசப் போக்கை தவிர்க்க முடியாதனவாகும் அதேவேளை இப்பாசிசப் போக்குகளே அவ்வியக்கங்களை உடைத்துச் சிதறடிக்கின்றன. குட்டி முதலாளித்துவ சக்திகளில் பெரும்பாலோனோர் சோசலிசத்தை விரும்புகிறார்கள். அவர்கள் தாம் விரும்புவதை அடைய வேண்டுமாயின் பாட்டாளிவர்க்க சித்தாந்தமாகிய மார்க்சிச - லெனினிசத்தின் அடிப்படையில் செயற்படும் ஒரு புரட்சிகரக் கட்சியின் தலைமையை ஏற்கச் செயற்பட்டேயாக வேண்டும்.

4) சுதந்திர ஈழதேசமானது சோசலிச ஈழம் என்னும் நிலையையடைய வேண்டுமானால் அதற்கான இயக்கம் அல்லது கட்சி தேசம் பூராவும் பரவலாக

கிராமங்கள் நகரங்கள் தோறும் சுரண்டப்படும் மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்புரீதியில் அணிதிரட்டி அதன் தளத்தில் செயற்பட வேண்டும். ஆயுத நடவடிக்கை மூலம் மக்கள் தன்னெழுச்சியாக இயக்கத்தின் பின் அணிதிரளுவார்கள் என்று கூறுவது தவறானதாகும். இவ்வாறு கூறும் FOCO கோட்பாடு அதன் உருவாக்கத்திற்குக் காரணமாயிருந்த இலத்தீன் அமெரிக்காவிலேயே தோல்வியடைந்துவிட்டது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சியாளர்கள் இக் கோட்பாட்டையே கடைப்பிடித்தார்கள். இவ் அநுபவத்தின் காரணமாக FOCO கோட்பாட்டு ரீதியான நடைமுறையைக் கைவிட்டு கிராம - நகர மக்களை அரசியல்ரீதியில் அணிதிரட்டி செயற்பட்ட நிக்கரகுவா புரட்சிக் கொடியை நிமிர நாட்டியது. எல்சல்வடோரில் போராளிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடும் எதிர்ப்புக்களையும் சமாளித்து வெற்றியை நோக்கி நடை போடுகின்றது. எனவே மக்கள் தாமாகத் திரளுவார்கள் என்றிருக்காமல் மக்களை அரசியல்ரீதியில் திரட்ட வேண்டும்.

மேலும் ஈழமக்கள் மீதான அடக்குமுறை இனரீதியில் நடைபெறுவதானால் இன உணர்ச்சியின் அடிப்படையில் ஈழமக்கள் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டக் குழுக்களின் பின்னே தன்னெழுச்சியாகத் திரளுவார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதனால் ஏற்படக்கூடிய பயன்" என்ன? (i) சிங்கள இனம் என்ற அடிப்படையில் அமைந்திருக்கும் சிறிலங்கா அரசபடையுடன் நேரடி முறையாக அமைப்புரீதியில் எதிர்த்துப் போராட முடியாமல் வெறுந்தொகையாக அநியாயமாகப் பலியாவார்கள். (ii) சரி! மக்களின் தன்னெழுச்சியான போராட்டத்தின் மூலம் ஈழ விடுதலை கிடைத்துவிட்டது என்றே வைத்துக் கொள்வோம். பிறகு என்ன ...? ஈழத்தின் கிராம நகரங்களில் உள்ள சுரண்டும் வர்க்கங்களின் கையில் உள்ள அரசும் அதிகாரம் எப்படி சுரண்டப்படுவோர் கைக்கு மாற

www.tamilarangam.net


முறையும். சுரண்டும் வர்க்கங்கள் தம்மைத் தாமே சுயமாக அணிதிரட்டிக் கொள்ளக்கூடியவை. ஆனால் சுரண்டப்படுபவர்கள் அவ்வாறான தன்மையுடையவர்கள் அல்ல. சுரண்டப்படுவோர் அரசியல் ரீதியில் அமைப்புரீதியாக அணிதிரட்டப்பட்டு அவர்களின் கையில் அரசு அதிகாரம் வராதவரை சோசலிசம் என்பது சுத்தப் பொய்யாகும்.

எனவே பாட்டாளிவர்க்க சித்தாந்தத்தின் அடிப்படையில் சுரண்டப்படும் வர்க்க மக்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தை நடத்தும் புரட்சிகரக் கட்சியே எதிரியை முறியடித்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும். அதுவே தொடர்ந்து மக்கள் தேசிய ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி என்பவற்றை நடைமுறைப்படுத்தும்.

மேற்கண்டவற்றை உணர்ந்து செயற்பட வேண்டியது ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள, அக்கறையுள்ள ஒவ்வொரு சோசலிச, முற்போக்கு, ஜனநாயக விரும்பிகளதும் கடமையாகும். இல்லாவிடின் இவ்வாறானவர்கள் தமது தியாகங்கள், சக்திகள் அனைத்தும் வீணடிக்கப்பட்டு விட்டனவே என்ற விரக்தி நிலையையே எதிர்காலத்தில் எதிர்நோக்குவார்கள்.

- இதரசன் -

---

தோழர்களே,

நீங்கள் 'தமிழ் முரசிற்கு' தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவு இன்று முரசை நான்காவது ஆண்டுக்குள் நுழைத்துள்ளது. ஈழப் போராட்டத்தில் தனது பங்கை 'தமிழ்முரசு' ஆற்ற 'தமிழ்முரசை' வளர்த்திடுங்கள். சகல தொடர்புகட்கும்...

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

www.tamilarangam.net


# துரோகங்கள் தூக்கி வீசப்படும்

சாருமதி

முழய மேகங்கள்
கலைய வேண்டின்
வானத்தில் ஒருபுயல்
வீசியே தீரும்
இன்றைய பின்னடைவுகளில்
இடுபாடுகளே
நாளைய வெற்றியின்
சிற்பக் கூடங்களே

இழப்பிலும் எழுச்சியிலும்
மக்கள்
இணையற்ற சாதனைகளை
ஏடேற்றியே உள்ளனர்.

இன்றென்பது
நித்தியமானதுமல்ல
நாளையென்பது
அசாத்தியமானதுமல்ல
புதிய வழி ஒன்றின்
திறவு கோல் ஒலிக்கிறது.
துரோகங்கள்
தூக்கி வீசப்படும்.

துயர் சுமக்கும்
தமிழ் இனத்தின்
சுதந்திரக் கீதம்
கண்ணீரால் அல்ல
செந்நீரால் எழுதப்படும்.

பழைய இலைகள் உதிர
புதிய இலைகள் துளிர்க்கும்
வருங்காலம் வசந்தமானது
புதிய வழியொன்றின்
திறவுகோல் ஒலிக்கிறது
துரோகங்கள்
தூக்கி வீசப்படும்.

www.tamilarangam.net



# நிக்கரகுவாவின் புரட்சியைப் பாதுகாப்போ




"எமது மக்கள் நவீன ஆயுதங்களைத் தரித்தவர்களல்ல. அவர்கள் இன்றும் வெறுங்கால்களுடனேயே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போர்ப்பயிற்சி பெற்றவர்கள். ஆக்கிரமிப்பாளரை எதிர்த்து அவர்கள் போரிடுவார்கள். ஆம். தமது இறுதி மூச்சு அடங்கும் வரை எமது நாட்டின் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் போரிடுவார்கள். ஒரு வேளை அணு ஆயுதங்களும், அராஜகச் சக்திகளும் இந்த சிறிய நாட்டின் மக்களை மிகுந்த கஷ்டத்தின் பின் ஜெயிக்கலாம். ஆனால் அப்போது கூட எமது மக்கள் தோற்றவர்களாகார். ஏனெனில் எமது மக்கள் போர்க்குணத்துக்கு உதாரணமாவார். எமது மக்கள் உலகின் இதர ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களுக்கு உந்து சக்திகளாவார். இனிவருங்காலங்களில் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போரை முடுக்கி விட்ட முன்னோடிகளாவார்....."

— டானியல் ஒட்டேகா
(ஸாண்டினிஸ்டிய புரட்சிகர நிறைவேற்றுக் குழு)

நிக்கரகுவா — எங்கள் கண்களின் முன்னால் புரட்சிச் சூரியனை பிரசவித்த நாடு. கியூபாவில் ஏற்றப்பட்ட புரட்சித் தீபத்தை உயர்த்திப் பிடித்து இலத்தீன் அமெரிக்காவெங்கும் புரட்சியின் கதிர்களைப் பரப்பும் நாடு. அடக்குமுறைக் கொடுமைகளினுள் அடிமை இருளில் புதையுண்டு கிடந்த தனது நாட்டு மக்களை சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்து சமூகப் புரட்சியை ஏற்படுத்தி, சமவுடமைத் தென்றலை வீசச் செய்யும் நாடு. இந்த நிக்கரகுவா மக்களின் எழுச்சி இன்று இலத்தீன் அமெரிக்கா முழுவதையும் மெல்ல மெல்ல சிலிர்ப்பாக்கத் தொடங்கிவிட்டது.

www.tamilarangam.net



இந்த புரட்சிக் குழந்தையின் தோற்றத்தை... வளர்ச்சியை... சீரணிக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் முடியவில்லை. 1979ம் ஆண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான நிக்கரகுவாவின் கொடுங்கோல் ஆட்சியாளன் சோமோஸா ஸான்டினிஸ்தியப் புரட்சியாளர்களால் தூக்கியெறியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்துக்கும், சுரண்டலுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. நிக்கரகுவாவில் பதவிக்கு வந்த ஸான்டினிஸ்தியப் புரட்சிகர அரசு எல்சல்வடோர், கௌதமாலா, ஹொண்டுராஸ் போன்ற நாடுகளின் புரட்சியாளர்களுக்கு முன்மாதிரியானது. இந்த நாடுகளிலெல்லாம் அடக்குமுறை ஆட்சியாளருக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக புரட்சிப் போராட்டம் முடுக்கி விடப்பட்டது. இதுவரைகாலமும் அறியாமை பேதைமையிலும், சுரண்டல் கொடுமையிலும் மூழ்கித் திளைத்திருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இந்த அரசு தாங்கொணா வலியைக் கொடுத்தது.

வெகுவிரைவில் புரட்சிப் பெருநெருப்பு தன்னைச் சுட்டுப் பொசுக்கப் போவதை அமெரிக்க ஏகாதிபத்திய வல்லூறு உணர்ந்து கொண்டது. எப்படியாவது ஸான்டினிஸ்தியப் புரட்சிகர அரசைக் கவிழ்த்து தனது கைப்பொம்மைகளிடம் ஆட்சியைக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தது. சதியாளர் சங்கமான சி.ஐ.ஏ.யின் மூலம் அனைத்துச் சதிகளும் முடுக்கிவிடப்பட்டன. நிக்கரகுவா எனும் புரட்சிக் குழந்தையின் குரல்வளை நரமாமிசக் கும்பலான சி.ஐ.ஏ.யின் கொலைக்கரங்களால் நெரிக்கப்படத் தொடங்கியது. ஆனால் நாளொரு வண்ணமாக வளர்ந்த இந்தச் சதிகள் புரட்சியின் தார்மீக பலத்தினால் முறியடிக்கப்பட்டன. ஒவ்வொரு சதியும் தோற்கடிக்கப்பட.. தோற்கடிக்கப்பட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொலை வெறி அதிகரித்தது. இந்த வெறி இன்று எப்படியாவது நிக்கரகுவாவை ஆக்கிரமித்து விடவேண்டும் என்ற காலனித்துவ வெறியாக வளர்ந்துவிட்டது.

www.tamilarangam.net


தனது சதிநடவடிக்கைகளுக்கு முன்னாள் கொடுங்கோல் ஆட்சியாளன் சோமோசாவின் கூலிப்படையை கூலிக்கு அமர்த்தி கோடிக்கணக்கான டொலர்கள் செலவிட்டு அவர்களுக்கு ஆயுதங்கள், பயிற்சிகள் கொடுத்து ஒரு எதிர்ப்புரட்சியொன்றை ஏற்படுத்த இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அல்லும் பகலும் முயல்கிறது. பாரிய முனைப்புக் கொண்ட சி.ஐ.ஏ.யின் இந்தச் சதிமுயற்சியை நியூயோர்க் டைம்ஸ் - "கிட்டத்தட்ட பத்தாண்டு காலத்தில் சி.ஐ.ஏ இத்தனை பெரிய இராணுவ, மற்றும் அரசியல் நடவடிக்கை முயற்சியை மேற்கொண்டதில்லை" என வர்ணிக்கிறது.

இந்த நடவடிக்கைகளில் கோடிக்கணக்கான டொலர்களும், கொஸ்ராரிக்கா, ஹொண்டுராஸ், நிக்கரகுவாவில் பல நூற்றுக்கணக்கான சி.ஐ.ஏ. உளவாளிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். நிக்கரகுவாவின் மக்களரசுக்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் சி.ஐ.ஏ மேல் இராணுவத்தாக்குதல் மாத்திரம் நடத்தவில்லை. தன்னுடைய சுரண்டல் பங்காளர்களான மேற்கின் முதலாளித்துவ நாடுகளையும், சர்வதேச நிதி நிறுவனங்களையும் நிக்கரகுவாவிற்கு அளித்துவந்த சகல பொருளாதார உதவிகளையும் நிறுத்தச் செய்துவிட்டது. இதன் ஒரு அம்சமே மேற்கு ஜேர்மனியும், நெதர்லாந்தும் ஏன் பெல்ஜியமும் கூட தமது ஏகாதிபத்திய எஜமானின் உத்தரவுக்கிணங்க நிக்கரகுவாவுக்கான தமது நேரடி உதவிகளை நிறுத்துவதாக அறிவித்தது.

நிக்கரகுவாவிற்கெதிரான சி.ஐ.ஏ.யின் நடவடிக்கைகள் குறித்து 'நியூஸ் வீக்' இப்படித்தான் எழுதியது. "சி.ஐ.ஏ.யின் மிக அம்பலமாகிவிட்ட இரகசிய நடவடிக்கைகள் ஒன்றில், ரகசிய முகவர்கள் நிக்கரகுவாவில் உள்ள ஆட்சிக்கு எதிராக ஒரு பரவலான போரை வழிநடத்த உத்தேசமாக 8 கோடி டொலர்களைச் செலவிட்டு வருகின்றனர் - களத்தில் பத்தாயிரம் கிளர்ச்சியாளர்களை அனுப்ப உதவுவது, நிக்கரகுவாவிற்குள் உள்ள அமைப்புக்கள் மீது விமானத் தாக்குதல் நடத்துவது, அவற்றை உளவறிவது, ஹொண்டுராஸிலியக்கா சீர்கெடுப்பதற்கான பல்வேறு பிரச்சார நடவடிக்கைகளைத் திட்டமிடுவது ஆகியவையே அந்தச் செயல்கள்

www.tamilarangam.net



இவையாவும் ஹொண்டுராசிலும், கொஸ்டாரிக்காவிலும், எல்சால்வடோரிலும் உள்ள அமெரிக்க நடவடிக்கைகள் மூலம் இயக்கப்படுகின்றன. சல்வடோரின் C-47 போக்குவரத்து விமானங்கள் மூலம் சல்வடோரிலிருந்து கிளர்ச்சியாளருக்கு அனுப்பப்படுகிறது. இவ் விமானங்களில் சல்வடோர் விமானிகளுக்குப் பதிலாக அமெரிக்க விமானிகளே இடம்பெற்று வருகின்றனர். இதனை கடந்த செப்டம்பர் 1ந் திகதி மானாகுவாவில் தேசிய வீரர்கள் சுட்டு வீழ்த்திய கிளர்ச்சியாளர்களின் ஹெலிகொப்டரில் இருந்த அமெரிக்க விமானப் படை வீரனின் சடலம் நிரூபித்தது.

நிக்கரகுவாவின் கடல் எல்லைகளில் கண்ணி வெடிகளைப் புதைத்தது, நிக்கரகுவாவின் பொருளாதார மையங்களை சேதப்படுத்தியது என்றெல்லாம் தனது கொலைக்கரங்களைப் படரவிட்டு வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று அந்த எல்லைகளையெல்லாம் கடந்துசென்று சதிகளின் உச்சக் கட்டத்துக்கே வந்துவிட்டது. ஒரு புரட்சியை எப்படி நடத்துவது என்று நாம் பல சமதர்மத் தோழர்களின் நூல்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியமோ ஒரு புரட்சிகர அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற தனது சதிகளை கைநூலாக்கி நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளருக்கு விநியோகித்திருக்கிறது.

குற்றவாளிகளை (CRIMINALS)க் கொண்டு கிளர்ச்சி மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது, மானாகுவாவில் புரட்சி அரசின் உயர் அதிகாரிகளையும், தலைவர்களையும் கொலைசெய்வது, அப்பாவி மக்களைக் கொலை செய்துவிட்டு அவர்களுக்கு சமூக விரோதிகள் என்று பட்டம் சூட்டுதல், நீதியரசர்கள், பொலிஸ், மற்றும் பாதுகாப்புப்படை உத்தியோகத்தர்களைக் கொலைசெய்து நாட்டில் நெருப்பலையைத் தோற்றுவித்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும் என்று சி.ஐ.ஏ யின் கைநூல் விபரிக்கிறது. இது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் எட்வர்ட் போலண்ட் - சர்வதேசப் பயங்கரவாதத்தைக் கண்டித்து பெற்றதாக பிதற்றிவரும் அமெரிக்க ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தான் கண்டுத்த அதே பயங்கரவாத முறையை ஒரு வீரனைக் கவிழ்க்கப் பயன்படுத்துவது வெட்கத்துக்கும் விசனத்துக்கும் உரியது எனக் கூறியுள்ளார்.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் இந்தச் சதிகள் நிக்கரகுவா மக்களின் புரட்சிகரச் சிந்தனைகளை மழுங்கடித்துவிடவில்லை. மாறாக அவர்கள் மேலும் மேலும் புரட்சித் தீயில் புடம் போட்டு எடுக்கப்படுகிறார்கள். ஏகாதிபத்தியம் மேற்கொள்ளப் போகும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட ஆண்களும், பெண்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிரச்சினைகளை நேரடியாகவே உலகின் நாகரிகமும் மனிதஉரிமைகளை மதிக்கும் பண்பும் வாய்ந்த நாடுகளிடமும், மக்களிடமும் முன்வைக்கிறார்கள். அந்த மக்களின் மூலம் பிரச்சினைகட்குத் தீர்வு காண முற்படுகிறார்கள்.

இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஏனைய நாடுகளுள்ளதைவிட மாறுபட்ட புதிய புரட்சிகர சமூக அமைப்பொன்றை உருவாக்கி வருகிறார்கள். தம்மைச் சூழ... மொத்த இலத்தீன் அமெரிக்காவையும் சிவப்பாக்குவதில் முன்னோடியாக உள்ளார்கள். உலகின் ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலைப் போருக்கு உதாரணமாய் நிற்கிறார்கள்.

எனவே இந்த புரட்சியின் வெற்றியை - நிக்கரகுவாவின் வெற்றியை நெருக்க முற்படும் ஏகாதிபத்தியத்தின் கொடுக்குகளை ஒட்டவே அறுத்தெறியும் போராட்டத்தில் ஈழமக்களாகிய நாமும் நிக்கரகுவா மக்களோடு இணைவோம். நிக்கரகுவாவின் புரட்சியைப் பாதுகாத்து அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் சி.ஐ.ஏ. சதிச்செயலுக்கும் புதியபாடம் புகட்டுவோம்.




பிரான்சு

## முதலாளித்துவத்தின் நெருக்குவாரம் இலாபத்தை கிளறுகிறது.

தொடர்ச்சியாக உலகின் ஒவ்வொரு மூலையிலும் முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டு வரும் நெருக்குவாரத்திலிருந்து பிரான்சும் தப்பவில்லை. தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் கைத்தொழில் உற்பத்தி வீழ்ச்சி தொடர்ந்து ஆயிரக் கணக்கானோரை வேலை இழக்கச் செய்து வீதிக்குக் கொண்டுவந்துள்ளது. 1987ம் ஆண்டுக்குள் மோட்டார் வாகன உற்பத்தித் துறையைச் சேர்ந்த 70,000 தொழிலாளர்கள் அரசின் தொழில் நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் வேலையிழக்கிறார்கள். அதுபோல உருக்கு உற்பத்தித் துறையில் இவ்வருடம் 20,000 தொழிலாளர்கள் வேலையிழக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டு வேலையாட்களே. இந்த நெருக்குவாரங்களினால் ஏற்கனவே தாக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீது மிகவும் கடுமையான வரிவிட, இறைவரிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பும் இல்லாத நடவடிக்கைகள் அரசதரப்பிலும் மௌனமாகவே ஆமோதிக்கப்படுவதாக தொழிற்சங்கங்களும் முற்போக்குச் சக்திகளும் மிகக் கடுமையாக அதனைச் சாடியதுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தயாராகின்றன.

www.tamilarangam.net



இங்கிலாந்து

## பிரித்தானியப் பிரதமருக்கு எதிராக ஐ.ஆர்.ஏ மீண்டும் எச்சரிக்கை!

"எங்களை பிரித்தானியர்கள் ஆட்சி செய்ய முடியாது. சிறைச்சாலைகளில் எங்கள் கைதிகளை படுமோசமாகச் சித்திரவதை செய்யமுடியாது. எமது சொந்த நாடான அயர்லாந்து வீதிகளில் எமது மக்களைச் சுட்டுத் தள்ள முடியாதென்பதை இனிமேலாவது பிரித்தானியப் பிரதமர் உணர்ந்து கொள்ளுவார்..." இவ்வாறு பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் மயிரிழையில் உயிர்தப்பிய குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு உரிமைகோரி ஐ.ஆர்.ஏ இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. "பிரித்தானிய அரசுக்கும், யுத்த வெறியர்களுக்கும் எதிராக பிரைட்டன் நகரில் 'கிராண்ட்' ஹோட்டலில் 100 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளை நாம் வைத்தோம். இன்று நாங்கள் துர் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம். ஆனால் என்றோ ஒரு நாள் அதிர்ஷ்டசாலிகளாக மாறுவோம்" என்று மேலும் அறிக்கை கூறுகிறது.

சீனா.

## இஸ்ரேலுடனான சீனாவின் இரகசியத் தொடர்புகள் அம்பலம்...

சீனா-இஸ்ரேல் இரு நாடுகளுக்கிடையேயும் அதிகரித்துவந்த ஆயுதப் பரிவர்த்தனைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன. சீன இராணுவத்தில் 9 ஆயிரம் முக்கிய யுத்த டாங்கிகள் இஸ்ரேலில் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதையும் சீன டாங்கிப் படைக்குத் தேவையான நவீன துப்பாக்கிகளையும், தீயணைப்புக் கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் இஸ்ரேலே வழங்கி வருவதையும் இதற்கான இடைத் தரகராக சிங்கப்பூர் இருந்து வருவதையும் முக்கிய பிரித்தானியப் பத்திரிகை 'சண்டே டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது

www.tamilarangam.net



## உபகண்டத்தில் போரை மூட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் தீவிர முயற்சி!

பாகிஸ்தானின் துணையுடன் தொடர்ச்சியாக இந்தியா மீது ஆத்திரமூட்டல்களை மேற்கொள்வதன் மூலம் இந்திய உபகண்டத்தில் போர் ஒன்றை மூட்டுவதற்கான முயற்சிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதன் ஒரு அம்சமாக பாகிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதுவர் 'இந்தியா பாகிஸ்தான் மீது தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிடுவதாகவும் அத்தகைய தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு துணை நிற்கும்' என்று கூறியுள்ளார். அதுமாத்திரமல்ல தொடர்ச்சியாக பெருந்தொகையான நவீன ஆயுதங்களையும், பாகிஸ்தான் அணுகுண்டு செய்வதற்கான வசதிகளையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து வருகிறது. இன்று பாகிஸ்தானின் பாதுகாப்புச் செலவு இந்தியாவினதைப் போன்று மூன்று மடங்காகியுள்ளது. இந்தியாவை ஓர் ஆக்கிரமிப்பு நாடாகக் காட்டு பாகிஸ்தானில் தான் தளம் ஒன்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிக்கு ஒத்துத் துணை போகும் வழியில் பாகிஸ்தானின் அடக்குமுறை ஆட்சி அரசு இந்திய எல்லைக்கு பெருந்தொகையான துருப்புகளை நகர்த்தியுள்ளதுடன் பல இடங்களில் தொடர்ச்சியாக ஊடுருவல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதாரச் சிக்கல்கள், இராணுவ ஆட்சியின் கெடுபிடிகள் இவற்றுக்கெதிராக நாட்டில் கிளர்ந்தெழுந்த மக்களின் கவனத்தை திருப்பி தமது ஆட்சியைப் பாதுகாக்க போர் ஒன்று மூளுவதை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் விரும்புகின்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோவியத் யூனியன்.

"போர் அச்சுறுத்தல் ஏற்படின் இந்தியா தனித்திராது" - சோவியத் யூனியன் எச்சரிக்கை.

இந்திய-பாக் எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்துவதாகவும், இந்தியாவுடன் புதிய ஆயுதப்போட்டி ஒன்றை ஏற்படுத்த பாகிஸ்தான் கடுமையாக முயல்வதாகவும் சோவியத் யூனியன் கடுமையாகச் சாடியுள்ளது. இந்திய-பாக் போதல் ஏற்படுமிடத்து பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆதரவைத் தெரிவித்து அமெரிக்கத் தூதர் விடுத்த அறிக்கை குறித்து சோவியத் யூனியன் "பாகிஸ்தான் இராணுவம் வாஷிங்டனின் விருப்பைப் பூர்த்தி செய்யும் கீழ்ப்படிவான ஒரு நிறைவேற்றுநரே" என்று குறிப்பிட்டதுடன் "இந்திய-பாக் எல்லைகளில் ஆயுத ஆத்திரமூட்டல்களை ஏற்பாடு செய்வோர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். யுத்த அச்சுறுத்தல் ஒன்று ஏற்படுமாயின் இந்தியா மட்டும் தனித்திராது" என்றும் கூறியுள்ளது. "ஒரு பாகிஸ்தானிய-இந்திய யுத்தத்தை விட வேறு இழிவான வழிகளையும் வாஷிங்டனின் ஆத்திரமூட்டுவோர் கையாள்வதாகவும்" சாடியுள்ள சோவியத் யூனியன் இந்த விஷயத்தில் அணிசேரா நாடுகளின் அனுதாபங்கள் இந்தியாவின் பக்கமே இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

அதே வேளையில் "உலக அமைதியை ஏற்படுத்துவதில் அமெரிக்காவுக்கு அக்கறையில்லை. இராணுவ வலுப்பெறுவதே அதன் முக்கிய நோக்கம்" என சோவியத் வெளிநாட்டமைச்சர் அந்ரே குரோமிக்கோ கிழக்கு ஜேர்மனின் பேர்லின் நகரில் நடந்த கூட்டம் ஒன்றில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வன்மையாகச் சாடியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியா-

# இந்தியாவின் புதிய பிரதமர் ராஜிவ் காந்தி.



ஏகாதிபத்தியத்தின் ஏவல்நாய்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பாரதத்தின் பெருந்தலைவி பிரதமர் இந்திரா காந்தி பலியானதைத் தொடர்ந்து இந்தியாவின் பிரதம மந்திரியாக அவரது மகனாகிய திரு. ராஜிவ்காந்தி இந்திய அமைச்சரவையினால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 40வயது நிரம்பிய இவர் ஓர் விமான செலுத்துனர் ஆவர். 1980 ல் ஆண்டு அரசியலுக்குள் பிரவேசித்த இவர் காங்கிரஸ் கட்சியைப் புனரமைப்பதிலும், இந்தியாவின் கிராமங்களினூடாகச் சுற்றுப் பிரயாணம் செய்து கட்சியை வளர்ப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். தாயாரைப் போலவே ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிந்தனை வாய்ந்த இவரை அநுபவமற்றவராகவும், பலவீனமுடையவராகவும் காட்டும் வகையில் முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்கள் தொடர்ச்சியாக செய்திகள் வெளியிட்டு வருவதுடன் நாட்டில் பதட்ட நிலையை ஏற்படுத்தும் வகையில் இந்து - சீக் மக்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்களுக்கு தூபமிட்டு வருகின்றன. இவை அனைத்தையும் சமாளிப்பதாக உறுதியளித்துள்ள திரு. ராஜிவ் காந்தி நாட்டின் தேசிய ஐக்கியத்துக்காக நாம் தொடர்ந்து போராடப் போவதாகவும் அதற்கு மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் வேண்டியுள்ளார். இந்தியாவின் பெருந்தொகையான மக்கள் ராஜிவின் நியமனத்தை வரவேற்றுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இது யாட்சியின் ஆரம்பம்

இன்று தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலோர் கேட்கும் கேள்வி இதுதான்: "எங்கட பொடியள் இன்று சேர்ந்து செய்தால் என்ன?"

அரசியல் நாடித்துடிப்பை செம்மையாகக் கணிக்க முடியாத சாதாரண மக்களிடம் இருந்து வரும் இந்த வார்த்தைகள் வெறுமனே அசட்டை செய்யக் கூடியதா...? இல்லை!

அரசியல் நாடித்துடிப்பை வெகுஜனங்கள் புரிந்து கொள்வது என்பது பிரச்சனையல்ல. மாறாக வெகுஜனங்களின் நாடித்துடிப்பை அரசியல் செய்யும் விடுதலை இயக்கங்கள் செம்மையாகப் புரிந்து கொள்கின்றனரா என்பதுவே பிரச்சனையாகும்.

சாதாரண ஈழக் குடிமகனுக்கு சிறீலங்கா இராணுவம் அவனது பிரதேசத்திலிருந்து விலக வேண்டும். விலைவாசிகள் அவனது பணப்பைக்குள் அடங்க வேண்டும்.

இச்சாதாரண ஈழக் குடிமக்களை சிறீலங்கா அரசு என்னும் சக்திமிக்க எதிரியை முகம் கொடுக்க காலாகாலமாக முடக் கட்டி வைத்திருந்த தமிழ் பூர்சுவாத் தலைமைகள் மடங்கிவிட்டன.

இந்த தமிழ் பூர்சுவாத் தலைமைகள் மேடையிலே குரலை உயர்த்திப் பேசியும், பாராளுமன்றக் கதிரைகளை இறுக்கமாகப் பிடித்தும் வந்தனர். அரசுக்கு எதிரான போராட்டத்தில் இவர்கள் எதிர்ப்பு - ஒப்பந்தம் - எதிர்ப்பு என்ற வட்டத்தில் சுழன்று வந்தனர். இவர்களது அரச எதிர்ப்புக்கள் தமிழ் பூர்சுவாப்

www.tamilarangam.net



பத்திரிகைகளில் அதிக அளவில் விளம்பரப் படுத்தப் பட்டது. இவ்வாறு ஒப்பந்தங்கள் ராஜதந்திரங்களாக வர்ணிக்கப்பட்டு அரசியல் சாணக்கியர்கள் என இவர்களுக்கு மகுடம் சூடப்பட்டது.

இந்த தமிழ் பூர்சுவாத் தலைமையின் எதிர்ப்பு(?) நடவடிக்கைகளின் உச்சக்கட்டம் உண்ணாவிரதப் போராட்டமாகவும் ஒப்பந்த முயற்சிகள் வட்ட மேசை மாநாடாகவும் அமையப் பெற்று வருகின்றன.

சாதாரண ஈழத்துமக்கள் தங்களுடைய தலைவர்களின் மேல் நம்பிக்கை வைக்கத் தொடங்கியது 80களிலேதான். எனவே தங்களுடைய தலைவர்கள் பிரிந்து நின்று அரசியல் செய்வது சாதாரண மக்களுக்கு விளங்கவில்லை.

இதே சாதாரண மக்கள் 1970களிலே தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் என்ற இரண்டு பூர்சுவாத் தலைமைகளும் ஒன்றாக வேண்டும் என மிகவும் விரும்பினர். தமிழ் பூர்சுவாக்களின் சுத்திரமற்ற தலைமையால் ஒன்றுபட வேண்டிய காலகட்டம் வந்த போது அது தமிழர் கூட்டணியாகப் பரிணமித்தது.

ஆனால் இந்த நிலைமை போன்று இல்லாமல் இன்று எமது இளைஞர் இயக்கங்களால் மிகச் சக்தி வாய்ந்த மூன்று ஐக்கியத்தின் அடிப்படையில் ஒரு வேலைத் திட்டத்தை முன்வைத்துள்ளன. இன்று நாள் வரை பொது எதிரிக்கெதிரான போராட்டத்தில் பிளவு பட்டு நின்றதன் மூலம் சாதாரண தமிழ் பேசும் மக்களின் கோபத்துக்குள்ளாகி வந்த தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று விடுதலை இயக்கங்களும் ஒரு குறைந்தபட்ச வேலைத் திட்டத்தில் ஐக்கியமாகினர்.

சாதாரண தமிழ் பேசும் மக்களுக்கு இது பற்றி அளப்பரிய மகிழ்ச்சி. இருந்தாலும் மீதமிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), மற்றும் இதர விடுதலை இயக்கங்களும் ஒன்றுசேர்ந்து இயங்கினால் நல்லது என ஒரு விருப்பம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சாதாரண ஈழத்தமிழ் மக்கள் கூட்டணியில் இருந்து ஒதுங்கி எங்களது இளைஞர்களிடம் வரக் காரணமாக இருந்தது அவர்களின் கைகளில் சுழன்று கொண்டிருக்கின்ற துப்பாக்கிதான் எனக் கூட்டு முயற்சியில் வெற்றி பெற்ற TELO, EROS, EPRLF ஆகிய அமைப்புக்கள் கருதவில்லை. அத்துடன் துப்பாக்கியின் மீது கை வைத்து சத்தியம் செய்து உருவாக்கப்பட்டதல்ல இந்த ஐக்கியம்.

ஐக்கியப்பட்ட இந்த மூன்று இயக்கங்களும் சாதாரண தமிழ் மக்களின் முன் வைத்த வேலைத்திட்டங்கள் எவை என்பதை நோக்கின் இக்கூட்டின் முக்கியத்துவம் தெளிவாகும்.

காலா காலப் பண்ணைத் தீர்மானத்திலும், அதைத் தொடர்ந்த 1977 பொதுத்தேர்தலுக்கான கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பாரிய பூதக் கண்ணாடி கொண்டு தேடித்திரிந்தாலும் தெளிவாக்கப்படாத விடயங்கள் எமது இயக்கங்கள் ஐக்கியப்பட்ட நாளன்று வெளியிடப்பட்ட குறைந்த பட்ச வேலைத்திட்டத்தில் தெளிவாக்கப்பட்டது.

ஈழவிடுதலை தவிர்ந்த வேறெந்த குறைந்த பட்ச சமரசத்திற்கும் இடமளிப்பதில்லையென்ற அவர்களது வேலைத்திட்டம் மேலும் சுதந்திர ஈழத்தில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் என்ற பாரிய பொறுப்பை உள்ளடக்கிறது. சோசலிசத்தின் பரம எதிரியும், மனித சமுதாயத்தின் புற்று நோயும், காலா காலம் தமிழ் பூர்சுவாக்களின் எஜமானுமாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை விடுவித்தல் என்ற வரலாற்றுக் கடமையை எமது இயக்கங்களின் அரசியல் வேலைத்திட்டம் உள்ளடக்கிக் கொண்டது.

ஆம். சமுதாயத்தின் மேல் கவிந்திருந்த இருளை அகற்றும் பணியின் தொடக்கம் ஆரம்பமாகிவிட்டது காலா காலமாக எமது சமுதாயத்தின் கண்கள்மீது கட்டப்பட்டிருந்த வாடன்கள் எங்களுடைய இளைஞர்களால்

www.tamilarangam.net



அழிக்கப்பட்டுவிட்டது. ஆங்கிலத்தில் வாந்தியெடுத்த தமிழ் பூர்சுவாத் தலைமைகள் தமிழ் தேசத்தை கூட்டு ஊட்டி வந்த இனவாதம் என்ற நச்சுப்பாலை இனியும் ஊட்ட முடியாதவாறு முகங்கள் அழிக்கப்பட்டன.

இதுநாள்வரை அமெரிக்க மோகத்தில் வெற்றுப்பானையைச் சுரண்டிக் கொண்டிருந்த தமிழ் சமுதாயத்தின் சிந்தனைமுறையை மாற்றும் முயற்சியில் 'எங்கட பொடியள்' போட்ட புதிய அத்திவாரம் தான் அவர்களது அரசியல் வேலைத்திட்டத்தில் வெளிப்பட்டது. பானையில் சோறு நிரம்ப வேண்டுமானால் பகுத்தறிவுடன் எமது சமுதாயம் புடம்போட்டாக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகர நிலை உருவாயிற்று.

இவ்வாறன ஓர் அரசியல்திட்டத்தின் அடிப்படையில் TELO, EROS, EPRLF ஆகிய இயக்கங்கள் தமது உடனடி வேலையை இவ்வாறு வரையறை செய்து கொண்டனர்:

1) சிறீலங்கா அரசபடைகளுக்கு எதிராக எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்திச் செயற்படுத்தல்.

2) வெளிநாடுகளில் பிரச்சாரங்களை கூட்டாக மேற்கொள்ளுதல்.

3) எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான தனிநபர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பொது நிதியைத் திரட்டி அதனை ஒரு பொதுக்குழு மூலம் நிர்வகித்தல்.

இவ்வாறாக ஒரு முழுமையான தேசிய விடுதலைத் தயாரிப்பை செய்து கொண்டிருக்கும் எமது இளைஞர்களின் கூட்டமைப்பானது மேலும் விரிவுபட்டு ஈழமக்களுக்கான அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றே சாதாரண மக்கள் விரும்புகின்றனர். இதன் காரணமாகவே இக்கூட்டமைப்பில் மற்றைய விடுதலை இயக்கங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் மேலோங்கி நிற்கிறது.

www.tamilarangam.net


பொது எதிரிக்கு எதிரான எமது போராட்டம் ரப் பெற்றாக வேண்டும். இதற்காக இயக்கங்களுக் கிடையில் கூட்டமைப்பு உருவாகவேண்டும் என பெரும் பான்மையான தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

கூட்டமைப்பு என்பது வெறுமனே இயக்கங் கள் ஒரு பத்திரத்தில் கையெழுத்திடுவது என்று அர்த்த மாகாது. மாறாக தனது தனித்தன்மையைப் பேணுகி ன்ற விடுதலை இயக்கமானது அதே பொழுதில் மற் றைய விடுதலை இயக்கங்களுடன் இணைந்து உருவா க்கும் மேலோபாயத்திலும், தந்திரோபாயங்களிலும் எவ்வாறு பொதுஎதிரியைத் தோற்கடிப்பது என்பதி லேயே பொருள்படும்.

ஐ.தே.க அரசானது சர்வ வல்லமையுடன் அரசபயங்கரவாதத்தை தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த் துவிட்டு காட்டுமிராண்டித்தனமான ஆட்சியை நட த்திக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் சி.ஐ.ஏ, இஸ்ரேலின் மொசாட், பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் என ஐ.தே.க அரசின் சர்வதேச நாசகார ராஜ்யமானது பூகோளம் எங்கும் விரிந்து கிடக்கிறது.

எனவே இன்று தேசவிடுதலையை முன்னெடு க்கும் மற்றைய இயக்கங்களும் ஏற்கனவே உரு வாக்கப்பட்ட கூட்டமைப்பில் பங்குகொண்டு பலம் மிக்க பொது எதிரியை தோற்கடிக்க வேண்டும் என் றே சாதாரண ஈழமக்களே விரும்புகின்றனர்.

---

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் இந்திராகாந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 3.11.1984 சனிக் கிழமை பிரான்ஸ் வாழ் தமிழ் பேசும் மக்களால் மௌன ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப்பட் டது. சகல ஈழ விடுதலை இயக்கங்களும் கல ந்து கொண்ட இவ்வூர்வலம் ஈழ திருமதி இந்திராகாந்தி மீது கொண்ட அபி மானத்தை தெளிவாக்கியது.

---

www.tamilarangam.net

# ஈழப்போராளி தன் அன்னைக்கு எழுதிய கடிதம்


## அன்னைக்கு ஒரு கடிதம்........

அம்மா, உன் மைந்தன் நாட்டுக்காகப் புறப்
பட்ட செய்தி உன்னை உடனே அதிர்ச்சிக்குள்ளாக்
கியிருக்கும், ஆனால் இப்போது அதில் இருந்து மீண்டு
இருப்பாய். தாயே! உனக்காகவே நான் என் தாயத்
திருநாட்டின் விலங்கொடிக்கப் புறப்பட்டு விட்டேன். அதில்
எத்தகைய சோதனைகள் வந்தாலும் தாங்கிக்
கொள்ளவும் பழகிவிட்டேன். இந்தப் புனித
பணியின் போது ஒரு வேளை மரணத்தின் பிடி
யில் நான் சிக்கிவிட்டால் கலங்காதே — என்னை
மரணம் நெருங்காது. மரணத்துக்குப்பின் சொர்க்
கமோ, நரகமோ அதைப்பற்றிக் கவலைப்படமா
நீர்கள், நான் சோசலிசவாதியாக இருப்பதால்
இவற்றில் எல்லாம் எனக்கு நம்பிக்கை
யில்லை. ஆனால் உன் எண்ணப்படி சொர்க்கம்
தான் எனக்குக் கிடைக்கும்

அம்மா, உறுதியாக ஒன்று சொல்கிறேன்
நான் எதிரிகள் நிறைந்த.....பகுதிக்குத்
தான் போக விருப்பம் தெரிவித்துள்ளேன்
அங்கு எதிரிகளைக் கதிகலங்க வைக்கிறேன்
பார். நாங்கள் நாடமைத்த சேதியை விரைவில்
நீ அறிவாய் - எனவே கலங்காதே அம்மா...
நான் எவ்வளவு இலட்சிய புருஷனாக-
வாழ்ந்தேன் என்பதை என் வீரமரணத்துக்
குப்பின் நீ அறிவாய். அம்மா ஈழத்தை மீட்டெ
டுக்கும் வரை ஓயாது என் மூச்சு.

அன்புள்ள மைந்தன்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்